### தமிழ்நாட்டில் பசுமைப் பரப்பை அதிகரிக்க பலகோடி நாற்றங்கால்

# முதலமைச்சரின் ‘பசுமைத் தமிழக கனவு’ - விரைவில் நனவாகும்!

## சட்டப் பேரவையில் வனத்துறை மானியக் கோரிக்கையில்

## 10 அறிவிப்புகளை அறிவித்து அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் பதிலுரை!

சென்னை, ஜூன் 28-

தமிழ்நாட்டில் காடுகளில் பசுமைப் பரப்பை அதிகரிக்க பல கோடி நாற்றங்கால் நடப்படும் என்றும் முதலமைச்சரின் பசுமைத் தமிழக கனவு விரைவில் நனவாகும் என்றும் பேரவையில் வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் பதிலுரையில் பெருமையுடன் குறிப்பிட்டார்.

வனத்துறை மானியத்தில் அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் பதிலுரை வருமாறு:-

என் பசுமை வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்டவர்கள் வீழ்த்தப்படாமல் காத்திட, இந்திய அரசியலமைப்பு சட்டத்தில், அவர்களின் உரிமைகளை உறுதி செய்த ‘சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர்’ அவர்களை முதற்கண் வணங்குகிறேன்.

சாதி சமயங்களை கடந்தது மனிதம், என்று சமூகத்திற்கு சுய மரியாதைப் பாடம் கற்பித்த ஈடில்லா தலைவர் ‘தந்தை பெரியார்’ அவர்களை வணங்குகிறேன். தமிழர் படை எங்கெங்கும், என்றென்றும் வென்றிட தமிழுக்கு உரம் சேர்த்த தமிழர் தலைவர் ‘பேரறிஞர் அண்ணா’ அவர்களை வணங்குகிறேன்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைத்த, களைப்பறியா கடல் அலையாய், தாழ்ந்தோரை உயர்த்தி தரணி ஆள வழி நடத்திய திராவிட வழிகாட்டி ‘முத்தமிழறிஞர் கலைஞர்’ அவர்களை வணங்குகிறேன். திராவிட கொள்கை களுக்கு மேடையெங்கும் மெருகேற்றிய பேராசிரியர் பெருந்தகை அவர்களை வணங்குகிறேன். தந்தையின் பேருக்கு பெருமை சேர்க்கும் தனையனாய், மக்களவைத் தேர்தலில் ‘40க்கும் 40’ என்று சாதனை வெற்றி கண்டு, 3 ஆண்டு ஆட்சி முடிவில்லா ஆட்சியாய், எந்நாளும் நீடிக்க, நிறைவான திட்டங்கள் வடித்திட்ட, மக்கள் போற்றும் பெருமதிப்பிற்குரிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பணிந்து வணங்குகிறேன். அவையில் அனைவரையும் வழிநடத்தும் மரியாதைக்குரிய அவை முன்னவர் அய்யா அவர்களையும் வணங்குகிறேன். சபை ஆசானாய்த் திகழும் பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மக்களவைத் தேர்தலில் மகத்தான வெற்றிபெற மதியுகியாய் செயல்பட்டு, 29 பைசாவை சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டிலுள்ள 39 இடங்களிலும் வெற்றிபெற திராவிடக் கொள்கை கதிராய் ஒளிரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் எங்கள் அன்பு உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன். சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் மற்றும் அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய பசுமையான வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய அரசியல் வழிகாட்டி, அன்பிற்கினிய K.R.N. ராஜேஸ்குமார் அவர்களுக்கும், எனக்கு எப்போதும் உறுதுணையாக இருக்கும் என் குடும்பத்தாருக்கும் நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். எனக்கு என்றும் ஊக்கமளிக்கும் ராசிபுரம் சட்டமன்ற தொகுதியைச் சார்ந்த அனைத்து கழக நிர்வாகி களுக்கும், தொண்டர்களுக்கும், பொது மக்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களவைத் தேர்தலில் நல்லதொரு வெற்றியைத் தந்த நாமக்கல் மாவட்ட கழகத்தின் அனைத்து நிர்வாகி களுக்கும், தொண்டர்களுக்கும், பொது மக்களுக்கும் என்னுடைய பணிவான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

பூமித்தாயின் பொலிவான பச்சை ஆடை, பரிணாம வளர்ச்சியின் அடிப்படை, பலவகை உயிரினங்களின் உறைவிடம், பிணி நீக்கும் மூலிகைகளின் பிறப்பிடம், கடந்தகால உலகின் மிச்சம், மனிதனின் எதிர்காலத்தை முடிவு செய்யும் இந்த வன வளத்தின் மிச்சசொச்சம், வளமான வாழ்வுக்கு வனமே மிக அவசியம் என உணர்ந்து, நமது மண்ணை, மக்களின் வாழிடமாக, வளப்படுத்தும் வனங்களைப் பாதுகாக்க, நமது முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு திறம்பட பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

### யானை வழித்தடங்கள்!

தற்போது வனத்துறையில் மிக முக்கியமாக கருதப்படும் யானை வழித்தடங்கள் குறித்தும், காட்டுப் பன்றிகளால் விவசாயிகளுக்கு ஏற்படும் இன்னல்களை தீர்ப்பது குறித்தும், வனப்பகுதிகளில் தேவைப்படும் சாலை வசதிகள் மற்றும் கட்டுமானப் பணிகள் குறித்தும் உள்ள சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்து, நம் மாநிலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் கடந்த 3 ஆண்டுகளில் முதலமைச்சர் அவர்கள் நாட்டிலேயே முதல் முறையாக மேற்கொண்ட மேன்மையான திட்டங்கள் குறித்தும் என்னுடைய உரையில் சுருக்கமாக எடுத்துரைத்த பின்பு, துறை அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

வனப்பாதையில் யானை செல்லுமிடமெல்லாம் உயிரினங்கள் உயிர்பெற்று எழுகிறது. சூழல் இயலின் முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. காடுகளின் காவலர்கள் என்பது அதன் சிறப்பு. அவற்றை வைத்தே, காடுகளுக்கு மதிப்பு. இத்தகைய சிறப்பு வாய்ந்த யானைகளை பாதுகாக்க மிக அவசியமானது அதன் வழித்தடங்கள். அதாவது, elephant corridors. யானை வழித்தடங்கள் என்றால் “யானை வாழ்விடங்களை இணைக்கும், யானைகளால் தொடர்ந்து பயன்படுத்தப்படும் தடங்கள்” என்று குறிப்பிடலாம். வனப்பகுதிகள் இடைவெளியின்றி தொடர்ச்சியாக காணப்பட்ட காலத்தில் யானைகளின் நடமாட்டம் வனத்திற்குள்ளேயே இருந்து வந்தன. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில், கன்னியாகுமரி தொடங்கி கிருஷ்ணகிரி வரையுள்ள வனப்பகுதிகள், இடைவெளி இல்லாது பரந்திருந்த காலங்களில், யானைகளால் விவசாயிகளுக்கும், குடியிருப்புக ளுக்கும் தொந்தரவுகள் இருந்ததே இல்லை. கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்ட விவசாய நிலங்களின் விரிவாக்கம் மற்றும் பல்வேறு கிராம மேம்பாட்டுப் பணிகளினால் வனப்பகுதிகளின் தொடர்ச்சி பாதிப்படைந்துள்ளது. தமிழ்நாட்டின் கிழக்கு தொடர்ச்சி மலைகளில் காணப்பட்ட யானைகள் தற்போது நிரந்தரமாக அழிந்தே விட்டன.

தமிழ்நாட்டின் வனப்பகுதியில் காணப்படும் பேருயிரான யானைகளை பாதுகாக்க, பல்வேறு முயற்சிகளை நமது அரசு மேற்கொண்டு வருகிறது. யானைகளின் வாழிடங்களை இணைப்பதன்மூலம், மனிதயானை முரண்பாடுகளை பெரிதும் குறைப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின்பேரில், யானைகள் வழித்தடங்களை அடையாளம் காண்பதற்கு சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. உலகளவில் யானை நிபுணராக அறியப்பட்ட முனைவர் ராமன் சுகுமார் அவர்களால் அந்த சிறப்புக் குழுவின் வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு, அந்த வரைவு அறிக்கை யானை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆய்வு நிறுவனங்களின் கருத்திற்கென வனத் துறையின் வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது. அக்கருத்துக்கள் தொகுக்கப்பட்டு, வரைவு அறிக்கை செம்மைப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வறிக்கையானது தமிழாக்கம் செய்யப்பட்ட பிறகு, யானை நடமாட்டமுள்ள மாவட்டம்வாரியாக அந்தந்த பகுதிக்கான யானை வழித்தடங்கள் குறித்த விவரங்களை மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் விளக்கி, மக்களின் கருத்துக்கள் தொகுக்கப்படும். அதனடிப்படையில்தான் இறுதி அறிக்கை சிறப்புக் குழுவால் முடிவு செய்யப்பட்டு, பின்பு அரசின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படும். இந்த நிலையில் யானை வழித்தடங்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின், அவை சம்மந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர் மற்றும் வனப் பாதுகாவலர் ஆகியோர்களால் தெளிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## விளை நிலங்களில் காட்டுப்பன்றிகளால் ஏற்படும் பாதிப்பை தடுக்க நடவடிக்கை!

### காட்டுப் பன்றிகளால் விவசாயிகள் பாதிப்பு!

காட்டுப் பன்றிகளால் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காடுகளையொட்டியுள்ள விவசாய நிலங்களில் பயிரிடப்பட்ட விளைபொருட்கள் காட்டுப் பன்றிகளால் அதிகமாக சேதப்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்குத் தீர்வுகாண விவசாயிகள் நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து வந்தனர். அதனையேற்று, முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், காட்டுப்பன்றிகள் மற்றும் இதர வன உயிரினங்களால் பயிர்ச்சேதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு உரிய வழிமுறைகளை ஆராய்வதற்கு விவசாய பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிறப்பு குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவானது கலந்தாலோசித்து, காட்டுப் பன்றிகளை கட்டுப்படுத்துவதற்குகேரளஅரசால்மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. அதன்படி, வன எல்லையிலிருந்து தூரத்தை கருத்தில் கொண்டு 3 மண்டலங்களாக அடையாளம் காணப்படும். அதாவது, Zone A, Zone B, Zone C என மூன்று Zone ஆக அடையாளம் காணப்படும். Zone A, மண்டலம்அ, காப்புக் காட்டிலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவு வரை; Zone B, மண்டலம்ஆ, காப்புக் காட்டிலிருந்து 1 கிலோ மீட்டருக்குமேல் 5 கிலோ மீட்டர் வரை; Zone C, மண்டலம்இ, காப்புக் காட்டிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவிற்குமேல் என்று வகைப்படுத்தி, அதற்கேற்றாற்போல் சில நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் நம் மாநில சூழலுக்கேற்ப வனப் பகுதியிலிருந்து 5 கிலோ மீட்டர் துரரத்திற்கு வெளியே நடமாடும் மற்றும் தங்கி பயிர்ச்சேதங்களை ஏற்படுத்தும் பன்றிகளை வனத் துறையின்மூலம் வேட்டையாட பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, காட்டுப்பன்றிகள் பிரச்சினை உள்ள கிராமங்களில் வனவர் அல்லது வனக்காப்பாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அந்தந்த பகுதி ward member ஆகிய மூன்று நபர்களைக் கொண்ட குழு அமைக்கப்படும். இந்தக் குழு, விளை நிலத்தில் காட்டுப்பன்றிகளை வேட்டையாடுவதன் அவசியத்தை உறுதி செய்யும். அந்தக் குழு அளிக்கும் பரிந்துரையை ஏற்று, மாவட்ட வன அலுவலர் காட்டுப்பன்றிகளை வேட்டையாடுவதற்கு அனுமதி வழங்குவார்.



காட்டுப்பன்றிகள் பிரச்சனை உள்ள கிராமங்களில் வனவர் அல்லது வனக் காப்பாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அந்தந்தப் பகுதி வார்டு மெம்பர் ஆகிய மூன்று நபர்களை கொண்ட குழு அமைக்கப்படும். இந்தக் குழு விளைநிலத்தில் காட்டுப்பன்றிகளை வேட்டையாடுவதன் அவசியத்தை உறுதி செய்யும். அந்தக் குழு அளிக்கும் பரிந்துரையை ஏற்று, மாவட்ட வன அலுவலர் காட்டுப்பன்றிகளை வேட்டையாடுவதற்கு அனுமதி வழங்குவார்.

வேட்டைக்கான வழிமுறைகளின்படி, அப்பகுதியைச் சேர்ந்த வனவர் அல்லது வனக்காப்பாளர் காட்டுப்பன்றியை குழுவின் முன்னிலையில் வேட்டையாடுவார். வேட்டையாடப்பட்ட காட்டுப்பன்றியை விவசாயக் கழிவுகளைக் கொண்டு எரித்து, சாம்பல் ஆக்கவோ அல்லது ரசாயனங்களை பயன்படுத்தி அதனை புதைக்கவோ, வனத் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதுமட்டுமல்லாமல், ஒரு சில நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு வன ஆக்கிரமிப்பு பகுதியில் காட்டுப்பன்றியை சுட அனுமதியில்லை. அதாவது Zone A. Zone Bல் 5 கிலோ மீட்டருக்குள் வேட்டையாட அனுமதியில்லை.

### வனத்துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்!

சினைப் பன்றிகளையும், குட்டிகளையும், பாலூட்டும் பன்றிகளையும் வேட்டையாட அனுமதியில்லை. காட்டுப்பன்றி வேட்டை மற்றும் அதனை அப்புறப்படுத்தும் நிகழ்வுகள் அனைத்தும் காணொளி பதிவு செய்யப்படும். இந்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும்பட்சத்தில் விளைநிலங்களுக்கு காட்டுப் பன்றிகளால் ஏற்படும் பாதிப்புகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் வனப் பகுதிகளில் சாலைகள் வேண்டியும், மிக முக்கியமானது, இந்தச் சாலையையொட்டி நிறைய வெட்டுத் தீர்மா னங்களும் கோரிக்கைகளும் வந்துள்ளன. ஆகவே, இதைப் பற்றி தெளிவுபடுத்த வேண்டுமென்ற முயற்சியில், அடிப்படை கட்டுமானங்கள் வேண்டியும், உதாரணமாக பள்ளி வகுப்பறைகள், வனப் பகுதிகளில் அமைந்துள்ள கோவில்களில் சில வசதிகள் கோரியும் பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. வனத் துறையிடமிருந்து அனுமதி பெறுவதில் காலதாமதம் ஆகிறது என சட்டமன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். அதேபோல், பல்வேறு சந்தேகங்களும் அவர்களுக்கு எழுகிறது. அதனை தெளிவுபடுத்தும் விதமாக சில விளக்கங் களை தெரிவிக்க விரும்பு கிறேன்.

வனத் துறையைப் பொறுத்தவரை வனப் பகுதியில் செயல்படுத்தப்படும் திட்டங்க ளுக்கு வழங்கப்படும் அனுமதி மாநில அரசின் பரிந்துரையோடு, ஒன்றிய அரசின் வனப் பாதுகாப்புச் சட்டம், 1980ல் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படி வழங்கப்படுகிறது. வனச் சாலைகளை பொறுத்தவரை, வனப் பாதுகாப்பு சட்டம், 1980, அமலுக்கு வருவதற்கு முன்பு, காப்பு காடுகள் குறித்த அறிவிக்கையிலோ (RFNotification),வனச்செயல்திட்டத்திலோ (Working plan). வனச்சாலை மற்றும் அனுமதிக்கப்பட்ட பாதை பதிவேட்டிலோ (Forest Road Register) சாலைகள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தால், அந்தச் சாலைகளை சீரமைக்க முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (PCCF) அனுமதி பெற்று, ஏற்கனவே உள்ள சாலைகளின் நீள, அகல அளவுகள் மாறாமல் சீரமைத்துக் கொள்ளலாம்.

வனப் பகுதியில் செல்லும் அத்தகைய சாலையின் தன்மையை மாற்ற வேண்டும் என்றாலோ அல்லது அகலப்படுத்த வேண்டும் என்றாலோ, ஒன்றிய அரசின் PARIVESH Portal என்னும் இணையதளத்தில் விண்ணப்பித்து ஒன்றிய அரசின் அனுமதி பெற வேண்டும். வனப் பாதுகாப்பு சட்டம், 1980 அமலுக்கு வந்த பின்பு, வனப் பகுதியில் அமைக்கப்பட்ட சாலைகளை சீரமைக்க வேண்டும் என்றாலோ அல்லது புதிதாக சாலை அமைக்க வேண்டும் என்றாலோ, சம்மந்தப்பட்ட பயனாளி (User Agency) உதாரணத்திற்கு தொடர்புடைய துறைகள், HR&CE, Highways அல்லது DRDA, யாராக இருந்தாலும் PARIVESH Portal இணையதளத்தில் முறைப்படி விண்ணப்பித்து ஒன்றிய அரசின் அனுமதி பெற்ற பின்பே சாலைப் பணியை மேற்கொள்ள இயலும்.

வனப் பகுதியில், வனம் சாராத பணிகளை, உதாரணத்திற்கு கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்கு வன நிலத்தை பயன்படுத்த வேண்டிய தேவை இருப்பின் PARIVESH Portal இணையதளத்தில் அனுமதி பெற்ற பின்பே பணியை மேற்கொள்ள இயலும்.

அந்த பயனாளி, அந்த user agency, அந்த department விண்ணப்பித்த பிறகு, சில முக்கியமான நிபந்தனைகளை பூர்த்திச் செய்ய வேண்டும். விண்ணப்ப தாரர்கள் தங்களின் திட்டங்களுக்கு தேவைப்படும் வன நிலங்களுக்கு ஈடாக இரண்டு மடங்கு மாற்று நிலம் வனத் துறைக்கு வழங்க வேண்டும். அந்த இடம் மரம் வளர்ப்பதற்கு உகந்த இடமாக இருக்க வேண்டும். Compensatory Afforestation Fund Management and Planning Authority (CAMPA) என்று சொல்லக்கூடியஈடு கட்டும் தோட்டம் எழுப்புதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக வனத் துறை நிர்ணயம் செய்யும் தொகையினை விண்ணப்பதாரர் செலுத்த வேண்டும். வன நிலத்திற்கான நிகர மதிப்பு அதாவது, Net Present Value (NPV) என்ற தொகையை செலுத்த வேண்டும். நில ஒதுக்கீடு கோரும் இடத்தில், இயற்கையாக வளர்ந்த மரங்களைspontaneous trees, அதை வெட்டுவதற்கு மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் அனுமதி பெற வேண்டும். மேற்காணும் தகவல்கள் அனைத்தும் விண்ணப்பதாரரால் வழங்கப்படும்பட்சத்தில், வனத் துறையால் விரைந்து அனுமதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு தலைமையின்கீழ் பல்வேறு தனித்தன்மை வாய்ந்த திட்டங்கள் நாட்டிலேயே முதல் முறையாகவும், முன்னோடி திட்டங்களாகவும் செயல்படுத்தப்பட்டு தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்து வருகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறேன். வன உயிரினங்கள் மின் தாக்குதலால் பாதிக்காத வகையில் மின் வேலிகளை அமைத்து, இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாடு மின்வேலி விதிகள் 2022 அறிவிக்கை செய்யப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. இரயில் விபத்தால் யானைகள் இறப்பதை தடுப்பதற்காக ரூபாய் 7.24 கோடி செலவில் செயற்கை அறிவுத்திறன் கொண்ட தானியங்கி அமைப்பு நாட்டிலேயே முதல் முறையாக கோவை மதுக்கரையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் யானைகள் பாதுகாப்பிற்கான சீரிய முயற்சிகளால் கடந்த 3 ஆண்டுகளில் யானைகளின் எண்ணிக்கை 2,761லிருந்து 2,961 ஆக உயர்ந்துள்ளது. அழியும் தருவாயில் உள்ள அரியவகை உயிரினமான தேவாங்கினை பாதுகாக்க தேவாங்கு சரணாலயம் இந்தியாவிலேயே முதல் முறையாக கடவூரில் அமைக்கப்பட்டுள்ளது.

## யானைகளை பாதுகாப்பது நம் கடமையென விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்!

### ரூ.25.14 கோடியில் நீலகிரி வரையாடு திட்டம்!

கடல் வாழ் பாலூட்டியான, அரிய ஆவுலியாவை அதாவது, Dugong என்கிற mammal. அதை பாதுகாக்க பாக்நீரிணை, அந்த பாக் ஜலசந்தி பகுதியில் தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட எல்லைக்கு உட்பட்ட கடல் பகுதியில் ஆவுலியா பாதுகாப்பு காப்பகமாகDugong Conservation Reserve இந்தியாவிலேயே முதல்முறையாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. மன்னார் வளைகுடாGulf of Mannar மற்றும் பாக்நீரிணை பகுதியில் கடல் வளங்களை பாதுகாக்க உயர் திறன் கடல் வள பாதுகாப்பு படை அதாவது Marine Elite Force இந்தியாவிலேயே முதல் முறையாக இராமநாதபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் சீரிய செயல் ஊக்கத்தால் 15 Ramsar தலங்கள் புதிதாக அறிவிக்கப்பட்டு, இந்திய அளவில் ஈர நில பாதுகாப்பில் முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாட்டில் நிகழும் வனக் குற்றங்களை விரைந்து கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வன உயிரின குற்றத் தடுப்பு சிறப்பு படை Tamil Nadu Wildlife Crime Control Bureau (TNWCCB) உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் மாநில விலங்கான நீலகிரி வரையாட்டினை பாதுகாக்க, நமது முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் பேரில் ரூபாய் 25.14 கோடியில் நீலகிரி வரையாடு திட்டம் செயல்படுத்தப்பட்டதோடு, அக்டோபர் 7 ஆம் தேதியை நீலகிரி வரையாடு தினமாக இந்தியாவில் முதல் முறையாக அறிவிக்கப்பட்டது. மேற்கூறிய வனத்துறை திட்டங்கள் யாவும், தமிழ்நாட்டின் தரத்தினை, இந்திய அளவில் முதன்மைப்படுத்தி உள்ளது என்பதை மிகப் பெருமையுடன் பதிவு செய்கிறேன். (குறுக்கீடு) அவ்வளவுதான்.

மனித வன உயிரின மோதலினால் பாதிக்கப்பட்டோருக்கும், தொழிலாளர்களுக்கும் பலனளிக்கும் பல்வேறு நடவடிக்கைகளை நமது அரசு திறம்பட மேற்கொண்டுள்ளது. சில முக்கியமான நடவடிக்கைகளை மட்டும் கூற விரும்புகிறேன். மனித வன உயிரின மோதலால் ஏற்பட்ட மனித உயிரிழப்பிற்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகையை ரூபாய் 4 இலட்சத்திலிருந்து, முதலமைச்சர் அவர்கள், ரூபாய் 5 இலட்சமாக உயர்த்தி பின்பு, கடந்த வருடம் அந்த தொகையை ரூபாய் 10 இலட்சமாக உயர்த்தியுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகை விரைவாக கிடைக்கும் விதத்தில் மாவட்ட வன அலுவலர்களின் பெயரில் சிறப்பு வங்கி கணக்கு துவங்கப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் வன உயிரினங்களால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு மொத்தம் ரூபாய் 28.74 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தின் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் அடிப்படை வசதிகள் குறித்த கோரிக்கைகள் நீண்ட காலமாக நிலுவையில் இருந்தன. முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், TANTEA தொழிலாளர்களின் ஒரு நாள் ஊதியத்தை ரூபாய் 375லிருந்து ரூபாய் 438 ஆக உயர்த்தப்பட்டது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொண்டு, கூடுதலாக ஓய்வூதியம், வீடு பங்களிப்பு, bonus உள்ளிட்ட இதர பலன்களுக்கென ரூபாய் 75.14 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் மூலம் இருளரின் வாழ்வாதார மேம்பாட்டுக்கென கடந்த 2 ஆண்டுகளில் 32 முந்திரி தோட்டங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு 83 இருளர் குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

வன வளத்தை பாதுகாப்பதற்கும், வன உயிரினங்களுக்குத் தேவையான தீவனம் கிடைப்பதற்கும் தடையாக இருந்த அந்நிய களைச்செடிகளை துரித நடவடிக்கை மேற்கொண்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில் 7,700 ஹெக்டேர் பரப்பில் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

### பசுமை புரட்சி அதிகரிக்க நடவடிக்கை!

தமிழ்நாட்டின் பசுமை பரப்பை அதிகரிக்க முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த “பசுமைத் தமிழ்நாடு திட்டத்தின்கீழ்” பலகோடி நாற்றுகள் நடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி வாரியாக பசுமை பரப்பை உயர்த்துவதற்கு ஏதுவான இடங்களை அடையாளம் கண்டு, அவர்களுக்குத் தேவையான மரக்கன்றுகளின் விவரங்களை மாவட்ட வன அலுவலர்களிடம் தெரிவிக்க வேண்டுமென்று இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன். தங்களின் வேண்டு கோளுக்கு உரிய எண்ணிக்கையிலான நாற்றுகளை உற்பத்தி செய்து தருவதற்கு வனத் துறை தயாராக உள்ளது. தங்களின் முழுமையான ஒத்துழைப்பு சாத்தியமானால், முதலமைச்சர் அவர்களின் பசுமைத் தமிழக கனவு விரைவில் நனவாகும். அதனால் தங்களது மேலான ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

‘காற்றும் நீரும் வனமின்றி இல்லை சாத்தியம்! காட்டு வளம் காத்து, நாட்டு வளம் காப்போம்! நம் சந்ததிகள் செழித்திருக்க வனப் பாதுகாப்பில் விழித்திருப்போம்!’ என்று தெரிவித்து இந்த வருடத்திற்கான வனத் துறையின் அறிவிப்புகளை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

காடுகளை வளமாக்குவதில் பேருயிரான யானைகளின் பங்களிப்பு மிக முக்கியமானது. அத்தகைய யானைகளை பாதுகாப்பது நமது கடமையென விழிப்புணர்வை ஏற்படுத்தும்விதத்தில், இந்த அறிவிப்பு புத்தகம் யானைகளை முன்னிறுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது.

### வனத் துறை அறிவிப்புகள்

1. இராமேஸ்வரம் தீவு மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகத்தின் ஒரு பகுதியாகும். தனுஷ்கோடி ஒவ்வோர் ஆண்டும் 2 கோடி சுற்றுலா பயணிகள் வருகைதரும் ஒரு முக்கியமான சுற்றுலா தலமாகும். முன்மொழியப்பட்ட சூழல் சுற்றுலா உள்ளூர் சமூகத்திற்கு பயனளிப்பதுடன், மேம்பட்ட விழிப்புணர்வு மூலம் கடல் பல்லுயிர்ப் பாதுகாப்பிற்கும் உதவும். இராமேஸ்வரம் பவளப் பாறை, படகு சவாரி, சதுப்பு நில நுழைவுவாயில் பகுதி, குருசடை தீவு, சூழல் சுற்றுலா, பறவைக் கண்காணிப்பு தளங்கள், ஆமைகள் விளக்க மையம் மற்றும் கோதண்டராமர் கோயில் கழிமுகப் பகுதி மேம்பாடு ஆகியவை இந்த சூழல் சுற்றுலா மேம்பாட்டு திட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சில நடவடிக்கைகள் ஆகும். இத்திட்டம் 15.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

2. மரபியல் பன்முகத்தன்மையைப் பாதுகாப்பதற்கும் நிலைத்த வன மேலாண்மையினை ஊக்குவிக்கவும், வன மரபணு வளத்தைப் பாதுகாப்பதற்கும் நவீன வன மரபியல் வள மேலாண்மை வலையமைப்பை நிறுவுவது அவசியம். ஜெர்ம்ப்ளாசம் சேகரிப்பு, சேமிப்பு, இனப்பெருக்கம், விதை மற்றும் நாற்றுக்களை கையாளுதல், விதை சோதனை, குளோன் வங்கிகள், அதன் வாழ்விடம் மற்றும் வெளியிடத்தில் பாதுகாப்பு மற்றும் வன மரபியல் வளங்களின் நிலையான மேலாண்மை ஆகியவற்றுக்கான மையமாக இந்த பூர்வீக இன விதை பெட்டகம் செயல்படும்.

விதை நிலைத் தன்மையைப் பாதுகாப்பதற்காகவும், ஆண்டு முழுவதும் நடவு செய்வதற்காக விதைகளை வழங்கவும் கிரயோஜெனிக் குளிர்சாதன வசதியுடன்கூடிய சேமிப்பு பெட்டகம் 10.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

3. நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல் மற்றும் அதிகரித்துவரும் மக்கள் தொகை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டும், அரசு நிலங்களை பொருளாதார ரீதியாகப் பயன்படுத்துவதற்கான தேவை அதிகரித்துவரும் சூழ்நிலையில், சூழலியல், வனப்பரப்பு மற்றும் மரப்பரப்புகளைப் பாதுகாக்கும் நோக்கில் இச்சட்டம் முன்மொழியப்படுகிறது. நாட்டின் புவியியல் பரப்பில் 33% வனம் அல்லது பசுமைப்போர்வை அவசியம் என்ற தேசிய இலக்கை அடைய இந்த அரசு உறுதியாக உள்ளது. அரசுக்குச் சொந்தமான நிலங்களில் மரங்களை வெட்டுவதற்கான விரிவான விதிமுறைகளை வகுப்பதன்மூலம் சுற்றுச்சூழல் சமநிலையை மீட்டெடுக்க இச்சட்டம் உதவும்.

4. தமிழ்நாடு மாநில வனக் கொள்கை 2018ல் வெளியிடப்பட்டது. இந்த கொள்கையானது மாநிலத்திற்குள் வன வளங்கள் மேலாண்மை, பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாட்டிற்கான கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் உத்திகளை கோடிட்டுக் காட்டுகிறது.

வனப் பாதுகாப்புச் சட்டம், 1980, வன உயிரின பாதுகாப்புச் சட்டம், 1972 ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய திருத்தங்கள், வனப் பாதுகாப்பு, பல்லுயிர் மறுசீரமைப்பு, நிலையான வன மேலாண்மை, சமூகப் பங்கேற்பு மற்றும் வாழ்வாதார ஆதரவு, காலநிலை மாற்றத்தைத் தணித்தல் மற்றும் தழுவல், கூட்டாண்மை மற்றும் கூட்டுறவு ஆகியவற்றில் புதிய பரிமாணங்களைக் கொண்டு வந்துள்ளன.

எனவே, வனப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், காடுகளை மீட்டெடுப்பதில் புதிய பரிமாணங்களைக் கொண்டு வருவதற்கும், புதிய தமிழ்நாடு மாநில வனக் கொள்கை, 2024 இந்த அரசால் வெளியிடப்படும்.

5. அண்மையில் காலமான இந்தியாவின் தலைசிறந்த வனவிலங்கு உயிரியலாளரும், தமிழ்நாட்டைச் சேர்ந்த வனப் பாதுகாப்பு ஆர்வலரும், உலக அளவில் புகழ்பெற்ற வன உயிரின காவலருமான டாக்டர் ஏஜேடி ஜான்சிங் அவர்கள் வாழ்நாள் முழுவதும் வன உயிரின பாதுகாப்பிற்கு அளித்த பங்களிப்பினை அங்கீகரிக்கும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் வன உயிரின வார விழா கொண்டாட்டத்தின் போது வன உயிரின பாதுகாப்பில் சிறந்த பங்களிப்பை வழங்கிய வன உயிரின ஆர்வலர் ஒருவருக்கு ஆண்டுதோறும் “டாக்டர் ஏ.ஜே.டி ஜான்சிங் வன உயிரின பாதுகாப்பு விருது” வழங்கப்படும். இந்த விருது ஒரு பாராட்டுப் பத்திரம் மற்றும் 25 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையை உள்ளடக்கியதாக இருக்கும்.

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்